**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 09.02.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புத்தகக் கண்காட்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மாணவர் நலமையத்தின் சார்பாக நடத்தப்படும் இரண்டு நாட்கள் புத்தகக் கண்காட்சி 08.02.2023 மற்றும் 09.02.2023-ல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பல்கலைகழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள், 08.02.2023 அன்று காலை புத்தகக் கண்காட்சியை துவக்கி வைத்தார். ஆண்டு தோறும் பல்கலைக்கழக நூலகத்தால் நடத்தப்படும் இப்புத்தகக் கண்காட்சியில் நாடு முழுவதிலிருந்து வேளாண் புத்தக பதிப்பாளர்களும் விற்பனையாளர்களும் கலந்து கொண்டு தங்களது புத்தகங்களை காட்சிப்படுத்துவர். இவ்வாண்டு, வேளாண்மையும் அது சம்பந்தப்பட்ட அறிவியற் பாடப் பிரிவுகள், பொது அறிவு, போட்டி தேர்வுகளுக்கான புத்தகங்கள் மற்றும் பல்வேறு புதுமை படைப்புகள் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. இதில் பல்கலைக்கழக உயர் அதிகாரிகளும், பேராசிரியர்களும், மாணவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தேவையான புத்தகங்களை தேர்ந்தெடுத்துச் சென்றனர். மேலும் பல்கலைக்கழக நூலகத்திற்குத் தேவையான புத்தகங்களை மாணவ மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்களின் பரிந்துரையின்படி பெற இருக்கிறது. இக்கண்காட்சியில் பெரும் திரளாக மாணவர்களும், பல்கலைக்கழக ஆசிரியப் பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இப்புத்தக கண்காட்சியில் அனைத்து புத்தகங்களுக்கும் 20 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. இப்புத்தக கண்காட்சி பல்கலைக்கழத்தின் அனைத்து உறுப்பு கல்லூரிகளுக்கு பயனுள்ளதாக அமையும். இவ்வருடம் விளையாட்டு தொடர்பான நூல்களுக்கான தனி விற்பனையகம் அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**